## History Model Test Questions 17 in Tamil With Answers

1. யாருடைய காலத்தில் முதல் இந்திய சுதந்திரப் போர் நடந்தது?

அ. டல்ஹௌசி பிரபு ஆ. ஆக்லாண்டு பிரபு

இ. லிட்டன் பிரபு **ஈ. கானிங் பிரபு**

2. "காமன் வீல்" வார இதழின் ஆசிரியர்

அ. காந்திஜி ஆ. எஸ்.என். பானர்ஜி

**இ. அன்னிபெசண்ட்** ஈ. இராஜாஜி

3. கீழ்க்கண்டவர்களுள் யார் தீவிரவாதியல்லாதவர்?

அ. பி.ஜி. திலகர் ஆ. வ.உ. சிதம்பரம்பிள்ளை

இ. லாலா லஜபதிராய் **ஈ. தாதாபாய் நௌரோஜி**

4. காந்தி தன்னுடைய தண்டி யாத்திரையை தொடங்கிய ஆண்டு

அ. 1928 ஆ. 1929 **இ. 1930** ஈ. 1931

5. திருமதி. அன்னிபெசண்ட் அம்மையாரின் தாய்நாடு

அ. இங்கிலாந்து ஆ. ஸ்வீடன்

**இ. அயர்லாந்து** ஈ. கனடா

6. "வெள்ளையனே வெளியேறு இயக்கம்" ஆரம்பித்த ஆண்டு

**அ. 1942** ஆ. 1943 இ. 1941 ஈ. 1932

7. "செய் அல்லது செத்துமடி" என்பது யாருடைய கூற்று?

**அ. மகாத்மா காந்தி** ஆ. திலகர்

இ. இந்திராகாந்தி ஈ. சுபாஷ் சந்திர போஸ்

8. சோழர்கள் கட்டிய கோயில் எது?

அ. மகாபலிபுரத்தில் உள்ள கடற்கரை கோயில்

**ஆ. தஞ்சாவூரில் உள்ள பிரகதீஸ்வரர் கோயில்**

இ. கோனார்க்கில் உள்ள் சூரிய ஆலயம்

ஈ. மதுரையில் உள்ள மீனாட்சி ஆலயம்

9. "கங்கை கொண்டான்" என்ற பெயர் கொண்ட சோழப் பேரரசர்

அ. தந்திதுர்கர் ஆ. ராஜாதிராஜன்

இ. வீர ராஜேந்திரன் **ஈ. முதலாம் ராஜேந்திரன்**

10. தமிழகத்தில் பாளையக்காரர் முறையை அறிமுகப்படுத்தியவர்கள்

**அ. நாய்க்கர்கள்** ஆ. பாண்டியர்கள்

இ. முகலாயர்கள் ஈ. ஆங்கிலேயர்கள்

11.விவேகானந்தர் இவரின் சீடர்

அ. மகாத்மா காந்தி ஆ. பிபின் சந்திரபால்

**இ. இராமகிருஷ்ண பரமஹம்சர்** ஈ. பாலகங்காதர திலகர்

12.கர்நாடகப் போர்களின் விளைவாக வீழ்ச்சியடைந்தவர்கள்

**அ. பிரெஞ்சுக்காரர்கள்** ஆ. டேனிஷ் நாட்டவர்

இ. ஆங்கிலேயர்கள் ஈ. போர்ச்சுக்கீசியர்கள்

13.பிளாஸி சண்டையின் வெற்றியாளர் எனப் புகழப்படுபவர்

அ. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆ. ஹேஸ்டிங்ஸ் பிரபு

**இ. ராபர்ட் கிளைவ்** ஈ. போர்ச்சுக்கீசுயர்கள்

14.“அமுக்த மால்யா” என்னும் நூலை இயற்றியவர்

**அ. கிருஷ்ண தேவராயர்** ஆ. விஸ்வநாத நாயக்கர்

இ. ராணி மங்கம்மாள் ஈ. ராமராஜன்

15.பிற்கால சோழப் பேரரசை நிறுவியவர்

அ. சிம்ம விஷ்ணு **ஆ. விஜயாலயச் சோழன்**

இ. முதலாம் இராஜேந்திரன் ஈ. முதலாம் பராந்தகன்

16.அலெக்சாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்த ஆண்டு

**அ. கி.மு. 326** ஆ. கி.மு. 285 இ. கி.மு. 380 ஈ. கி.பி. 110

17.கௌதம புத்தர் பிறந்த இடம்

அ. கபிலவஸ்து **ஆ. லும்பினி**

இ. பாட்னா ஈ. அகமதாபாத்

18.தமிழ்நாட்டின் சமூக நிதிக்கு வித்திட்டவர்

**அ. ஈ.வே.ரா. பெரியார்** ஆ. இராஜாஜி

இ. காமராஜர் ஈ. அண்ணாத்துரை

19.புத்தர் எங்கு முதன் முதலில் போதித்தார்?

**அ. சாரநாத்** ஆ. சாஞ்சி

இ. கயா ஈ. வாரணாசி

20.குப்தர் காலத்தில் வாழ்ந்த சிறந்த கணித மேதை

**அ. ஆரியபட்டர்** ஆ. வராகமிஹிரர்

இ. பரமகுப்தர் ஈ. பாணப்பட்டர்

21.“வாதாபி கொண்டான்” என்ற பட்டத்தை பெற்றவர்

அ. பரமேஸ்வரவர்மன் ஆ. முதலாம் மகேந்திரவர்மன்

**இ. முதலாம் நரசிம்மவர்மன்** ஈ. சிம்மவிஷ்ணு

22. அஷ்ட்திக் கஜங்கள் இருந்த அவை எந்தப் பேரரசு?

அ. அச்சுதராயர் **ஆ. கிருஷ்ண தேவராயர்**

இ. ராமராயர் ஈ. சதாசிவராயர்

23. முகமது கஜினி இந்தியாவின் மீது படையெடுத்து வர முக்கியக் காரணம் என்ன?

அ. இஸ்லாம் சமயத்தை பரப்புவதற்கு

ஆ. அரசை விரிவுபடுத்த

**இ. இந்தியாவின் செல்வத்தை கொள்ளையடித்துச் செல்ல**

ஈ. பொழுதுபோக்கிற்காக

24. ஷாஜஹான் ஆட்சியின் சிறப்பம்சம்

அ. பொருளாதாரச் செழிப்பு ஆ. ஆட்சி நிர்வாகத் திறமை

இ. அயல்நாடுக் கொள்கை **ஈ. கலையும் கட்டடமும்**

25. இந்தியாவின் தல சுய ஆட்சியின் தந்தை

அ. கானிங் பிரபு **ஆ. ரிப்பன் பிரபு**

இ. ராபர்ட் கிளைவ் ஈ. டல்ஹெளசி பிரபு

26. தமிழ்நாட்டில் இரயத்துவாரி முறையைக் கொண்டு வந்தவர்

அ. காரன்வாலிஸ் பிரபு ஆ. டல்ஹெளசி பிரபு

**இ. சர் தாமஸ் மன்றோ** ஈ. மேயோ பிரபு

27. புகாரை துறைமுகப் பட்டினமாக வைத்திருந்தவர்கள்

**அ. சோழர்கள்** ஆ. சேரர்கள்

இ. பாண்டியர்கள் ஈ. பல்லவர்கள்

28. பண்டைய சேர மரபில் யார் புகழ்மிக்கவர்?

அ. உதயஞ்சேரலாதன் ஆ. இமயவரம்பன்

**இ. செங்குட்டுவன்** ஈ. இளங்கோவடிகள்

29. துணிபு (A): வங்கப் பிரிவினை தேசிய உணர்வை ஊக்கிவித்தது.

காரணம் (R): வங்கப் பிரிவினை ஒன்றுபட்ட மக்களை பிரிக்கும் முயற்சி

**அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

இ. (A) சரி, ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு, ஆனால் (R) சரி

30. கீழ்க்கண்டவற்றில் எது சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது?

அ. அமைச்சரவை தூதுக்குழு - 1946

ஆ. வங்கப் பிரிவினை - 1906

**இ. கிரிப்ஸ் தூதுக்குழு - 1945**

ஈ. தனிநபர் அறப்போர் - 1939

31. காலமுறைப்படி வரிசைப்படுத்துக.

1. காந்தி இர்வின் ஒப்பந்தம்
2. தண்டிப் பயணம்
3. வெள்ளையனே வெளியேறு இயக்கம்
4. லாகூர் காங்கிரஸ்

**அ. 4, 2, 1, 3** ஆ. 2, 3, 1, 4 இ. 3, 2, 4, 1 ஈ. 4, 3, 2, 1

32. இந்தியா சுதந்திரமடைந்த பொழுது காங்கிரசின் தலைவர் யார்?

அ. மகாத்மா காந்தி **ஆ. ஜே.பி. கிருபாளனி**

இ. ஜவஹர்லால் நேரு ஈ. சர்தார் படேல்

33. கி.பி. 1942-ல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக இருந்தவர்

**அ. லின்லித்கோ** ஆ. வேவல் பிரபு

இ. வில்லிங்டன் ஈ. இவர்களில் எவருமில்லை

34. கேசரி என்பது

அ. சமூக சீர்திருத்தத்திற்காக சிலரால் அமைக்கப்பட்ட அமைப்பு

ஆ. எஸ்.என். பானர்ஜிக்கு சொந்தமான ஆங்கிலப் பத்திரிக்கை

**இ. ஒரு மராத்திய பத்திரிக்கை**

ஈ. இவை எதுவுமில்லை

35. கி.பி. 1939 இல் பார்வார்டு பிளாக் கட்சியை துவக்கியவர்

அ. டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் **ஆ. சுபாஷ் சந்திர போஸ்**

இ. சி.ஆர். தாஸ் ஈ. இவர்களில் எவருமில்லை

36. இராஜாஜி சட்டத்தை மீறி உப்பு எடுத்த இடம்

அ. திருப்பூர் **ஆ. வேதாரண்யம்**

இ. மணியாச்சி ஈ. சென்னை

37. கப்பலோட்டிய தமிழன் என்று அழைக்கப்படுபவர்

அ. சுப்ரமணிய சிவா **ஆ. வ.உ. சிதம்பரம் பிள்ளை**

இ. மகாகவி பாரதி ஈ. குமரன்

38. கி.பி. 1946ஆம் ஆண்டு இடைக்கால அரசில் உள்துறை அமைச்சரான தமிழர்

அ. காமராஜர் ஆ. பி.டி. ராஜன்

**இ. இராஜாஜி** ஈ. இவர்களில் எவருமில்லை

39. மதராஸ் மாநிலம் எப்போது தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது?

**அ. 1969** ஆ. 1970 இ. 1968 ஈ. 1971

40. பூதான இயக்கத்தை நடத்தியவர்

அ. காமராஜர் ஆ. மகாத்மா காந்தி

**இ. வினோபா பாவே** ஈ. பக்தவச்சலம்

41. கீழ்க்கண்டவர்களில் யார் பயங்கரவாதி?

அ. பாலகங்காதர திலகர் **ஆ. நீலகண்ட பிரம்மச்சாரி**

இ. கோபால் கிருஷ்ண கோகலே ஈ. வ. உ. சிதம்பரம் பிள்ளை

42. கி.பி, 1887 இல் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு நடத்தப்பட்ட இடம்

அ. மும்பை ஆ. கல்கத்தா

இ. சூரத் **ஈ. சென்னை**

43. வங்கப் பிரிவினை எப்பொழுது ரத்து செய்யப்பட்டது?

அ. 1908 ஆ. 1906 இ. 1910 **ஈ. 1911**

44. கி.பி. 1916-இல் மிதவாதிகளும் தீவிரவாதிகளும் ஒன்றுபட்ட இடம்

**அ. லக்னோ மாநாடு** ஆ. சூரத் மாநாடு

இ. லாகூர் மாநாடு ஈ. பாம்பே மாநாடு

45. கி.பி. 1929இல் முழு விடுதலை நோக்கமாக அறிவிக்கப்பட்ட போது காங்கிரஸின் தலைவர்

அ. மோதிலால் நேரு ஆ. மகாத்மா காந்தி

**இ. ஜவஹர்லால் நேரு** ஈ. சுபாஷ் சந்திர போஸ்

46. அலி சகோதரர்கள் பொறுப்பேற்றது

**அ. கிலாபத் இயக்கம்** ஆ. வெள்ளையனே வெளியேறு இயக்கம்

இ. ஒத்துழையாமை இயக்கம் ஈ. சுதேசி இயக்கம்

47. கி.பி, 1931இல் காந்திஜி, இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் பங்கேற்றபோது இங்கிலாந்தின் பிரதமர் யார்?

அ. அட்லி ஆ. சர்ச்சில்

**இ. ராம்சே மக்சோனால்டு** ஈ. இவர்களில் எவருமில்லை

48. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் டி.இ. ஆஷை மணியாச்சியில் சுட்டுக் கொன்றவர் யார்?

**அ. வாஞ்சிநாதன்** ஆ. குமரன்

இ. வா.வே.சு.ஐயர் ஈ. டி.எஸ். சொக்கலிங்கம்

49. 1920 –இல் தமிழ்நாடு காங்கிரசின் தலைவர்

அ. சத்தியமூர்த்தி ஆ. எஸ்.என். சோமயாஜுலு

இ. காமராஜர் **ஈ. பெரியார்**

50. நாட்டுப் பற்றுடையவர்களின் (1927) (1857) போராட்டத்தினால் யாருடைய சிலை சென்னையில் அகற்றப்பட்டது

**அ. கர்னல் நீல்** ஆ. ஜார்ஜ் அரசர்

இ. நிக்கல்சன் ஈ. சர்தாமஸ்ரோ

51. சர்வோதயா இயக்கத்தைத் தொடங்கியவர்

அ. வல்லபாய் படேல் ஆ. மகாத்மா காந்தி

இ. பாலகங்காதர திலகர் **ஈ. ஆச்சார்ய வினோபா பாவே**

52. தவறான இணையைக் கண்டுபிடி.

அ. செயங்கொண்டார் - கலிங்கத்துப் பரணி

ஆ. நம்பியாண்டார் நம்பி - தேவாரம்

**இ. சேக்கிழார் - நளவெண்பா**

ஈ. கம்பர் - கம்பராமாயணம்

53. ஹர்ஷா வர்த்தனரை தோற்கடித்தவர்

அ. சகான்கான் **ஆ. இரண்டாம் புலிகேசி**

இ. மகேந்திரவர்மன் ஈ. முதலாம் புலிகேசி

54. கீழ்க்கண்டவர்களில் சரியான வரிசை முறை

அ. அக்பர், ஷாஜஹான், ஜஹாங்கீர், ஔரங்கசீப்

ஆ. ஷாஜஹான், ஜஹாங்கீர், ஔரங்கசீப், அக்பர்

இ. ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப், அக்பர்

**ஈ. அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப்**

55. சரியான இணையைத் தேர்ந்தெடு.

அ. ஹுமாயூன் - காபூல்பாக்

ஆ. ஷெர்ஷா - திண்டனா

**இ. அக்பர் - பதேபூர் சிக்ரி**

ஈ. ஷாஜஹான் - புராணங்கள்

56. சிவாஜியின் அமைச்சரவை அழைக்கப்பட்ட விதம்

அ. அஸ்ட்திக்கஜங்கள் ஆ. மந்திரிபரிஷத்

**இ. அஷ்டப்பிரதன்** ஈ. நவரத்தினங்கள்

57. பண்டைய சோழர்களின் சின்னம் எது?

**அ. புலி** ஆ. வில் அம்பு

இ. மீன் ஈ. இதில் எதுவுமில்லை

58. கங்கை கொண்ட சோழபுர கோயிலைக் கட்டியவர்

அ. முதலம் குலோத்துங்கன் ஆ. முதலாம் இராஜராஜன்

இ. முதலாம் மகேந்திரன் **ஈ. முதலாம் இராஜேந்திர சோழன்**

59. தமிழ் சங்கங்களை நிறுவியவர்கள்

அ. சோழர்கள் **ஆ. பாண்டியர்கள்**

இ. சேரர்கள் ஈ. களப்பிரர்கள்

60. சரியானவற்றைத் தேர்ந்தெடு.

1. இந்திராகாந்தி முன்னாள் மன்னர் மானியத்தை ஒழித்தார்.
2. இந்திராகாந்தி பஞ்சசீலக் கொள்கையை உருவாக்கினார்.
3. இந்திராகாந்தி ஐந்தாண்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.
4. நேருவின் மறைவுக்குப் பின் இந்திராகாந்தி பிரதம மந்திரியானார்.

**அ. 1 மட்டும் சரியானது** ஆ. 1, 2 மட்டும் சரி

இ. 1, 2, 3 சரியானவை ஈ. இவற்றில் எதுவுமில்லை

61. எந்த ஆண்டு முஸ்லீம் லீக் நிறுவப்பெற்றது?

அ. 1905 **ஆ.1906** இ. 1907 ஈ. 1911

62. கி.பி. 1905-இல் வங்கப் பிரிவினைக்குக் காரணமாக இருந்த அரசப் பிரதிநிதி

**அ. கர்சன் பிரபு** ஆ. டல்ஹௌசி பிரபு

இ. லிட்டன் பிரபு ஈ. வெல்லெஸ்லி பிரபு

63. 1929-இல் லாகூர் காங்கிரஸ் மாநாடு இவர் தலைமையில் கூடியது

அ. காந்திஜி **ஆ. நேருஜி**

இ. நேதாஜி ஈ. இராஜாஜி

64. 'வந்தே மாதரம்' என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ. இந்திய மறுமலர்ச்சி ஆ. சத்திய சோதனை

இ. ஜாதகா கதைகள் **ஈ. ஆனந்தமடம்**

65. அகமதாபாத்திலுள்ள சபர்மதி ஆசிரமத்தை தோற்றுவித்தவர்

**அ. காந்திஜி** ஆ. அரவிந்தகோஷ்

இ. கோகலே ஈ. திலகர்

winmeen.com

66. இந்தியா சுதந்திரமடைந்தபோது இங்கிலாந்தின் பிரதம அமைச்சராக இருந்தவர்

அ. சர்ச்சில் ஆ. மவுண்ட்பேட்டன்

இ. இர்வின் **ஈ. அட்லி**

67. வாஞ்சிநாதனால் சுட்டுக் கொல்லப்பட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர்

அ. கர்னல் நீல் **ஆ. டி.ஈ. ஆஷ்**

இ. ஹென்றி லாரன்ஸ் ஈ. நிக்கல்கன்

68. கொடுக்கப்பட்ட கூற்றுகளை கவனிக்கவும்.

1. மௌண்ட் பேட்டன் பிரபு சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர்
2. சி. இராஜகோபாலாச்சாரி சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய தலைமை ஆளுநர்
3. சி. இராஜகோபாலாச்சாரி சுதந்திர இந்தியாவின் கடைசி தலைமை ஆளுநர்
4. வல்லபாய் படேல் தலைமை ஆளுநராக சி. இராஜாஜிக்குப் பின் நியமிக்கப்பட்டார்.

இவற்றுள்,

அ. 1 மட்டும் சரியானது ஆ. 1 மற்றும் 2 சரியானவை

**இ. 1, 2 மற்றும் 3 சரியானவை** ஈ. அனைத்தும் சரியானவை

69. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம்

அ. திருப்பத்தூர் **ஆ. கயத்தாறு**

இ. புதுக்கோட்டை ஈ. கோலார்பட்டி

70. தீவிரவாதிகளுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு சேரன் மாதேவியால் ஒரு குருகுலத்தை ஆரம்பித்தவர் யார்?

அ. வாஞ்சிநாதன் **ஆ. வி.வி. எஸ். ஐயர்**

இ. வ.உ. சிதம்பரம்பிள்ளை ஈ. சுப்ரமணிய சிவா

71. ஹரப்பா நாகரீகம் வள்ர்ச்சியுற்ற காலம்

**அ. 3250 BC – 2750 BC** ஆ. 100 AD - 200 AD

இ. 1000 BC – 500 BC ஈ. 500 AD – 1000 AD

72. மகாயான புத்தமதம் தோன்றியக் காலம்

அ. அஜாதசத்ரு ஆ. அசோகர்

**இ. கனிஷ்கர்** ஈ. விக்ரமாதித்தர்

73. முகமது பிம் துக்ளக் தனது தலைநகரை டில்லியிலிருந்து மாற்றிய இடம்

அ. கன்னோசி **ஆ. தேவகிரி**

இ. ஆக்ரா ஈ. அகமதாபாத்

74. வில்லியம் ஹாக்கின்ஸ் வருகை தந்த முகலாயப் பேரரசின் அவை எது?

அ. அக்பர் **ஆ. ஜஹாங்கீர்**

இ. ஷாஜஹான் ஈ. ஔரங்கசீப்

75.கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தி உள்ளது?

**அ. ஒழுங்குமுறைச் சட்டம் - 1773**

ஆ. பிட் இந்தியச் சட்டம் - 1763

இ. மிண்டோ மார்லி சீர்திருத்தம் - 1907

ஈ. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் - 1909

76.தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்ட தலைவர்

**அ. டாக்டர் அம்பேத்கார்** ஆ. ராஜாராம் மோகன்ராய்

இ. அன்னிபெசண்ட் ஈ. பாலகங்காதர திலகர்

77.இந்தியாவின் முதல் வைஸ்ராய்

**அ. கானிங் பிரபு** ஆ. கர்சன் பிரபு

இ. டல்ஹௌசி பிரபு ஈ. மிண்டோ பிரபு

78.மத்தவிலாசப் பிரகடனம் என்ற நூலை எழுதியவர்

**அ. முதலாம் மகேந்திரவர்மன்** ஆ. முதலாம் நரசிம்மவர்மன்

இ. நாதமுனி ஈ. நம்பியாண்டார் நம்பி

79. பண்டைய சோழர்களின் தலைநகரம்

அ. தொண்டி ஆ. முசிறி

**இ. காவிரிப் பூம்பட்டினம்** ஈ. திருச்சி

80.கோவாவைக் கைப்பற்றியவர்

அ. அல்மிடா ஆ. வாஸ்கோடகாமா

**இ. அல்புகர்க்கு** ஈ. சாமரின்

81.காமராசர் வைக்கம் சத்தியாகிரகத்தில் பங்கு பெற்ற ஆண்டு

**அ. 1920** ஆ. 1922 இ. 1924 ஈ. 1930

82.அலிகார் இயக்கத்தை தோற்றுவித்தவர்

**அ. சர்சையது அகமதுகான்** ஆ. நவாப் சலிமுல்லா

இ. முகம்மதுகான் ஈ. அலி சகோதரர்கள்

83.கைலாசநாதர் கோயிலைக் கட்டியவர்

அ. செயங்கொண்டார் ஆ. ஹர்ஷர்

இ. இரண்டாம் கிருஷ்ணா **ஈ. இராசசிம்மன்**

84.1878ஆம் ஆண்டு நாட்டு மொழி செய்தித்தாள் சட்டத்தை நிறைவேற்றியவர்

அ. ஹேஸ்டிங் பிரபு ஆ. டல்ஹௌசி பிரபு

**இ. லிட்டன் பிரபு** ஈ. ரிப்பன் பிரபு

85. பாலகங்காதர திலகரால் தன்னாட்சி இயக்கம் தொடங்கப்பட்ட இடம்

அ. நாகபுரி **ஆ. மும்பை**

இ. சென்னை ஈ. கன்பூர்

86. சுதேசி நீராவி கப்பல் கம்பெனியை தொடங்கியவர்

**அ. வ.உ.சி** ஆ. வ.வே.சு. ஐயர்

இ. சுப்பிரமணிய சிவா ஈ. மகாகவி பாரதி

87.வேலூர் சிப்பாய் கலகம் நடைபெற்ற ஆண்டு

**அ. கி.பி. 1806** ஆ. கி.பி. 1857 இ. கி.பி. 1824 ஈ. கி.பி. 1860

88.வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை நிறைவேற்றிய ஆண்டு

அ. 1941 ஆ. 1940 **இ. 1942** ஈ. 1945

89.ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பின் இரவீந்திரநாத் தாகூர் துறந்த பட்டம்

அ. தலைவர் **ஆ. நைட்ஹூட்**

இ.பிரபு ஈ. அரசர்

90.இந்திய தேசிய இராணுவத்தை தோற்றுவித்தவர்

அ. சி.ஆர். தாஸ் ஆ. காந்தி

இ. வல்லபாய் படேல் **ஈ. நேதாஜி**

91.டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார்

அ. ஆங்கிலப் பெண் ஆ. இந்தியப் பெண்

இ. அமெரிக்கப் பெண் **ஈ. அயர்லாந்துப் பெண்**

92.முதன்முதலில் ஜவஹர்லால் நேரு காந்திஜியை சந்தித்த இடம்

**அ. லக்னோ** ஆ. டெல்லி

இ. பாம்பே ஈ. அலகாபாத்

93.பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு

அ. 1767 ஆ. 1764 இ. 1747 **ஈ. 1757**

94.1929 ஆம் ஆண்டு லாகூர் காங்கிரஸ் மாநாட்டின் தலைவர்

அ. காந்திஜி **ஆ. நேருஜி**

இ. நேதாஜி ஈ. ராஜாஜி

95.பாரதமாதா சங்கத்தை தோற்றுவித்தவர்

**அ. நீலகண்ட பிரம்மச்சாரி** ஆ. சீனிவாச அய்யர்

இ. சத்தியமூர்த்தி ஈ. சுப்பிரமணிய சிவா

96. சுதேசி என்பதன் பொருள்

அ. ஒருவரின் சொந்த நாடு **ஆ. அந்நியப் பொருள் புறக்கணிப்பு**

இ. இங்கிலாந்து பொருட்கள் புறக்கணிப்பு ஈ. துணிகள் புறக்கணிப்பு

97. வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டை துறைமுகத்திற்கு வந்த ஆண்டு

அ. 1490 ஆ. 1495 இ. 1497 **ஈ. 1498**

98. இந்திய தேசிய காங்கிரஸின் எந்த கூட்டத்தில் வந்தே மாதரம் என்ற பாடல் முதன்முதலாக பாடப்பட்டது?

அ. 1892 **ஆ. 1896** இ. 1904 ஈ. 1886

99. ஒத்துழையாமை இயக்கம் கொண்டு வந்த போது தமிழக காக்கிரஸ் கட்சியின் தலைவர்

அ. ராஜாஜி ஆ. பிரகாசம்

இ. கே.வி. ரெட்டி **ஈ. பெரியார் ஈ.வெ.ரா**

100. “தத்துவஞானிகள் ஆட்சியாளர்களாக வேண்டும்” – கூறியவர் யார்?

அ. ஜவஹர்லால் நேரு **ஆ. பிளாட்டோ**

இ. அரிஸ்டாட்டில் ஈ. இந்திராகாந்தி

winmeen.com